சிகரத்தின்

# தினத் தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL · தமிழ் சமுதாயத்தின் குரல் · TAMIL DAILY Rs. 4

Vol: 13 ● Issue: 198 ● செவ்வாய்க்கிழமை ● 06.10.2026 ● சென்னை ●கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● 4 பக்கம் ● விலை ரூ.4





வள்ளலார் கருத்துகள் மக்கள் மனங்களில் சுடர்விட்டு எரிய வேண்டும்

விவசாய பணியின்போது மின்சாரம் தாக்கி தந்தை, மகன் உயிரிழப்பு!

விஜய் சேதுபதியை புகழ்ந்த மாளவிகா மோகனன்















# புதிய தலைமைச் செயலக விவகாரத்தில் அரசுக்கு

# நீதிமன்றம் உத்தரவிட முடியாது

## சென்னை உயர் நீதிமன்றம் கருத்து

**சென்னை, அக்.06:** புதிய தலைமைச் செயலக விவகாரத்தில் அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது, என சென்னை உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

சென்னை பட்டினப் பாக்கத்தில் 1,200 கோடி ரூபாய் மதிப்பில், புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கான அறிவிப்பை முதல்வர் விஜய் 110 விதியின் கீழ் சட்டப் பேரவையில் வெளியிட்டார்.

அதன்படி, பட்டினப் பாக்கத்தில் உள்ள தமிழக வீட்டு வசதி வாரியத்துக்கு சொந்தமான 21.37 ஏக்கர் நிலத்தில், புதிய தலைமைச் செயலகம் அமைக்கப் படவுள்ளது. இதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டது. இந்த அறிவிப்புக்கு, அரசியல் கட்சிகளும், மீனவர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பட்டினப் பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட தடை விதிக்கக் கோரி, சென்னை கோடம்பாக் கத்தை சேர்ந்த வழக்கறிஞர் ஆர்.எஸ். தமிழ்வேந்தன் என்பவர் உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அதில்,"பட்டினப்பாக்கத்தில் உள்ள தமிழக வீட்டு வசதி வாரியத்துக்கு சொந்தமான இடத்தில், புதிய தலைமைச் செயலகம் கட்ட, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. நிதி நெருக்கடியில் உள்ளதாக, தற்போதைய தவெக, தலைமையிலான அரசு அறிவித்துள்ளது.

அவ்வாறு இருக்கும் போது, புதிய கட்டிடம் கட்டுவதற்கு 1,200 கோடி செலவு செய்வதை விட, புனித ஜார்ஜ் கோட்டையில், தற்போது இயங்கி வரும் தலைமைச் செயலக கட்டிடத்தைப் புதுப்பித்து பயன்படுத்தினால், இவ்வளவு பெரிய தொகை செலவாகாது.





மக்களின் வரிப் பணமும் சேமிக்கப்படும். அந்த கட்டடம் நல்ல நிலையில் தான் உள்ளது. சென்ட்ரல் ரயில் நிலையம், உயர் நீதி மன்றம், பேருந்து நிலையம், அரசு பொது மருத்துவமனை போன்ற வற்றுக்கு அருகில் உள்ள தலைமை செயலகம் இடமாற்றம் செய்யப்பட்டால், பொது மக்கள் வந்து செல்வது மிகவும் கடினமாகி விடும்" என்றும் தெரிவித்துள்ளார்.

பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டும் திட்டத்தை கைவிட கோரி, செப்.12ல் தமிழக அரசின் தலைமைச் செயலர், பொது பணித் துறை தலைமை பொறியாளர், தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர் ஆகியோருக்கு அளித்த மனு இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை.

எனவே, பட்டினப் பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டும் திட்டத்தை கைவிடும்படி உத்தரவிட வேண்டும். மேலும், இந்த வழக்கில் தீர்வு எட்டும் வரை, தலைமைச் செயலக கட்டுமான பணிக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்" என மனுவில் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது,வழக்கை விசாரித்த நீதிபதிகள், "எந்த இடத்தில் கட்டடம் கட்ட வேண்டும் என அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது. வழக்குக்கான முக்கிய காரணங்களை கூட மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் எப்படி நீதிமன்றம் வழக்கை பரிசீலனை செய்ய முடியும். ஏற்கெனவே இதே கோரிக்கையுடன் தொடரப் பட்ட ஒரு வழக்கை அபராதத்துடன் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது

அரசின் கொள்கை ரீதியான விஷயங்களில் நீதிமன்றம் தலையிட முடியாது. புதிய பார்லிமெண்ட் கட்டுவதை எதிர்த்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. ஏற்கெனவே இதே போல 2011ல் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதை எதிர்த்த வழக்கு தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

அரசின் கொள்கை முடிவில் எப்படி தலையிட முடியும்? இந்த வழக்கு விளம்பரத்துக்காக தொடரப்பட்டதாக நீதி மன்றம் கருதுகிறது. அதனால், கடுமையான அபராதம் விதித்து வழக்கை தள்ளுபடி செய்ய போவதாக எச்சரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, வழக்கை திரும்பப் பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவித்ததால், வழக்கை அபராதம் ஏதும் விதிக்காமல் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# வெற்றிப் பயண பேருந்துகளில் ஓடும் ஊர் பெயர்கள்: பயணிகள் குழப்பம், தடுமாற்றம்

புதுக்கோட்டை: தமிழகத்தில் வெற்றிப் பயண திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ள அரசு புறநகர் பேருந்துகளில் எல்இடி திரையில் திட்டத்தின் பெயர் நிலையாகவும், ஊர் பெயர்கள் ஓடிக்கொண்டும் இருப்பதால் பயணிகள் குழப்பம் அடைந்து வருகின்றனர்.

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்ற தவெக அரசு, புறநகர்ப் பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயணம் செய்யும் 'வெற்றிப் பயணம்' எனும் திட்டத்தை தொடங்கி உள்ளது. அக்.2ம் தேதி காந்தி ஜெயந்தி நாளில் தமிழக முதல்வர் விஜய் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 139 புறநகர் பேருந்துகள் மூலம் நாள் தோறும் 823 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது, மகளிருக்கு இலவசப் பயணம் அறிவிக்கப்பட்டுள்ள நகர், புறநகர் ஆகிய அனைத்துப் பேருந்துகளிலும் எல்இடி திரை மூலம் 'வெற்றிப் பயணம்' எனும் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது.

புறநகர்ப் பேருந்துகளின் முகப்பில் உள்ள எல்இடி திரையில், பேருந்து செல்லும் இடத்தின் பெயரை நிலையாகவும், வழித்தடங்களை ஓடும் வகையிலும் வைத்திருந்தனர். இதனால், பயணிகள் செல்லும் இடத்தை எளிதாக அறிந்துகொள்ள முடிந்தது. இந்நிலையில், புதிதாக அறிவிக்கப்பட்ட வெற்றிப் பயண பேருந்துகளின் முகப்பில் உள்ள எல்இடி திரையில், பேருந்து செல்லும் இடத்தின் பெயர் இருந்த இடத்தில் 'வெற்றிப் பயணம்' என நிலையாக வைக்கப் பட்டுள்ளது.



பேருந்து செல்லும் இடத்தின் பெயரும், வழித்தடங்களின் பெயர்களும் ஓடும் வகையில் உள்ளன. இதனால், ஊர்களின் பெயரை அறிந்துகொள்வதில் பயணிகளுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டையைச் சேர்ந்த பயணிகள் கவிதா, வினோதா, மல்லிகை ஆகியோர் கூறியது: "வெற்றிப் பயணத் திட்டம் அமல்படுத்தப்பட்ட பேருந்துகளில் செல்லும் இடம், வழித்தடங்கள் ஆகியவை ஒன்றன் பின் ஒன்றாக ஓடிக்கொண்டே இருக்கின்றன. சில வழித்தடங்களில் எந்தெந்த ஊர் வழியாகச் செல்கிறது என்பதற்கான பெயர்கள் குறைவாக இருந்தாலும்,பெரும்பாலான வழித்தடங்களில் அதிகமாக இருக்கின்றன.

ஒவ்வொரு ஊரின் பெயராக மாறி வருவதற்குள் பேருந்து நிறுத்தத்தை விட்டுப் பேருந்தும் கிளம்பிவிடுகிறது. இது பயணிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதுடன், தங்கள் ஊருக்கு செல்லும் பேருந்து எது என்பதை அறிந்து, குறிப்பிட்ட பேருந்தில் ஏறுவதிலும் தடுமாற்றம் ஏற்படுகிறது.

எனவே, தற்போது 'வெற்றிப் பயணம்' எனும் பெயர் வைக்கப்பட்டுள்ள இடத்தில் வழக்கம்போல பேருந்து செல்லும் இடத்தின் பெயரையே வைக்க வேண்டும். திட்டத்துக்கான பெயரை வேறு இடத்தில் பயன்படுத்த வேண்டும்.

நகர்ப் பேருந்துகளில் இந்தக் குழப்பம் இல்லை. அதேபோல, அனைத்துப் புறநகர்ப் பேருந்துகளிலும் துகளிலும் வெற்றிப் பயணத் திட்டம் செயல்படுத்தப் படவில்லை என்பதால், பேருந்து தொலைவில் வரும் போதே தெரிந்துகொள்ளும் வகையில் முன்பக்கத்தில் குறிப்பிட்ட வண்ணம் தீட்ட வேண்டும்" என்றனர்.

இதுபற்றி போக்குவரத்துத் துறை அலுவலர்கள் கூறும் போது, "இதுகுறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று சரி செய்யப் படும்" என்றனர்.




சிகரத்தின் தினத்தென்றல்

### திமுக ஆட்சியை விட துவரம் பருப்பு கொள்முதல் விலை குறைவு

# அரசுக்கு ரூ.187.56 கோடி சேமிப்பு

**சென்னை, அக்.06:** பொது விநியோக திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்காகத் தவெக அரசு வெளிப்படையான முறையில் துவரம் பருப்பை கிலோவிற்கு ரூ.77.89 என்ற குறைந்த விலையில் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது.

கடந்த ஆட்சி காலத்தில் இதே அளவு மற்றும் தரத்திலான ஒரு கிலோ துவரம் பருப்பிற்கு ரூ.109.15 வரை செலுத்தப்பட்டது. தற்போது கிலோவிற்கு கிட்டத்தட்ட ரூ.31 குறைவாக கொள்முதல் செய்யப்பட்டதன் மூலம், கடந்த மூன்று மாதங்களில் மட்டும் மாநில அரசுக்கு ரூ.187.56 கோடி அளவுக்குப் பெருந்தொகை சேமிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலத்தில் 60,000 டன் துவரம் பருப்பைக் கொள்முதல் செய்யத் தவெக அரசு வெறும் ரூ.467.34 கோடியை மட்டுமே செலவிட்டுள்ளது.

ஆனால், முந்தைய ஆட்சியில் இதே 60,000 டன் துவரம் பருப்பை வாங்குவதற்கு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ரூ.654.9 கோடி வரை கஜானாவில் இருந்து செலவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து, இடைத்தரகர்கள் மற்றும் கமிஷன் முறைகேடுகளைத் தடுத்ததன் மூலமே இந்த மாபெரும் நிதிச் சேமிப்பு சாத்தியமாகியுள்ளது.

ரேஷன் கடைகளில் தரமான அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் கொள்முதல் செய்து மக்களுக்கு விநியோகிக்கும் தவெக அரசின் இந்த நடவடிக்கை, மக்கள் பணத்தை வீணாக்காமல் பாதுகாக்கும் நேர்மையான நிர்வாகத்திற்குச் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

# பேருந்தில் பெண்களிடம் அபராதம் விதிக்கக் கூடாது!

### போக்குவரத்துத்துறை அதிரடி அறிவிப்பு

**சென்னை, அக்.06:** தமிழக முதல்வர் ஜோசப் விஜய் கடந்த 2ம் தேதி வெற்றி பயணத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதன் மூலம், அரசு பேருந்துகளில் பெண்கள், பெண் குழந்தைகள் மற்றும் திருநங்கைகள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாநகர மற்றும் நகர சாதாரண பேருந்துகள், எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ், தாழ்தள பேருந்துகள், புறநகர சாதாரண பேருந்துகள் மற்றும் 40 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட மலைப் பகுதிகளுக்கு செல்லும் சாதாரண பேருந்துகள் உட்பட தமிழக போக்குவரத்து துறையில் செயல்படும் 12,691 அரசு பேருந்துகளில் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த திட்டத்தின் மூலம் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கும் இலவசமாக பயணம் செய்யலாம். எனவே, இந்த திட்டத்திற்கு பெண்கள் மத்தியில் பேராதரவு கிடைத்திருக்கிறது.

இந்நிலையில், மகளிர் மற்றும் திருநங்கைகளிடம் எந்த கட்டணமும் வசூலிக்ககூடாது என போக்குவரத்து துறை அறிவித்திருக்கிறது.

ETM பழுதானால் டிக்கெட் கொடுக்க வேண்டும். வெற்றிப் பயணம் என டிஜிட்டல் பலகை வைக்க வேண்டும்.

அனைத்து பயணங்களுக்கும் Zero Ticket வழங்க வேண்டும். Zero Ticket இல்லாத தகுதியான பயணியிடமிருந்து அபராதம் வசூலிக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மேலும், இத்திட்டம் தொடர்பான புகார்களை தெரிவிக்க இலவச உதவி எண் 149 அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### அதிகரிக்கும் சிறுநீரக செயலிழப்பு:

# டயாலிசிஸ் மையங்களின் எண்ணிக்கையை 500 ஆக உயர்த்த வேண்டும்: அன்புமணி



**சென்னை, அக்.06:** தமிழகத்தில் சிறுநீரகச் செயலிழப்பால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வரும் சூழலில், ஏழை எளிய மக்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்க ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்பட மாநிலம் முழுவதும் டயாலிசிஸ் மையங்களின் எண்ணிக்கையை 500 ஆக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்.,

தமிழ்நாட்டில் சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்படும் நோயர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாக வெளியாகி வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்படுவோரின் குடும்பங்கள் மருத்துவ ரீதியாக மட்டும் பொருளாதார ரீதியாகவும் நிலைகுலைந்து போகும் சூழலில், பாதிக்கப்பட்ட நோயர்களுக்கு இலவசமாக டயாலிசிஸ் சேவை வழங்குவதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படாதது கவலையளிக்கிறது.

இந்தியாவில் சிறுநீரக நோய் மற்றும் செயலிழப்புகள் அதிகம் உள்ள மாநிலங்களில் தெலுங்கானா, கோவா, ஒடிஷா, கேரளம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக ஐந்தாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது. சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்டோரின் தேசிய சராசரி 3.20% ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 4.30 விழுக்காட்டினர் சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்டிருப்பதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

சென்னை மருத்துவக் கல்லூரியின் சமூக மருத்துவ நிறுவனம் கடந்த ஆண்டு நடத்திய ஆய்வில் சிறுநீரக பாதிப்பு நிலைமை இன்னும் மோசமாக இருப்பதாக தெரியவந்துள்ளது.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பான்மையினர் தனியார் மருத்துவமனைகளில் தான் பணம் செலுத்தி டயாலிசிஸ் செய்து கொள்ள வேண்டியுள்ளது.

இதற்காக ஓர் அமர்வுக்கு ரூ.2000 வரை கட்டணம் வசூலிக்கப்படும் நிலையில், அதற்காக மட்டும் ஆண்டுக்கு ரூ.3-4 லட்சம் வரை செலவழிக்க வேண்டியிருக்கும். இது ஏற்கனவே வாழ்வாதாரம் இழந்து வாடும் குடும்பங்களை மீள முடியாத கடன்சுமையில் தள்ளிவிடும் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ந்து மருத்துவம் அளிக்க முடியாத அவல நிலையை ஏற்படுத்திவிடும். இவற்றில் எந்த நிலையும் ஏற்படாமல் தடுக்க வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் கடமை ஆகும்.

சிறுநீரக செயலிழப்பைக் கட்டுப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக டயாலிசிஸ் சேவை வழங்கி அவர்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கவும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இலவசமாக டயாலிசிஸ் சேவை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சேவை வழங்கும் கட்டமைப்பை விரிவுபடுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் குறைந்தது ஒரு டயாலிசிஸ் எந்திரமாவது அமைக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "வள்ளலார் கருத்துகள் மக்கள் மனங்களில் சுடர்விட்டு எரிய வேண்டும்": மு.க.ஸ்டாலின்



**சென்னை, அக்.06:** "வள்ளலார் ஏற்றிய அணையா விளக்கைப் போல அவர் வலியுறுத்திய சமூகநீதி, சமத்துவ மற்றும் மூடநம்பிக்கை எதிர்ப்புக் கருத்துகள் மக்கள் மனங்களில் சுடர்விட்டு எரிய வேண்டும்," என முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில், "தனிப்பெரும் கருணை நாள்; சாதி, சமயம், சடங்குகளைக் கடந்து அனைத்து உயிர்களையும் ஒன்றாகக் கருதிய வள்ளலார் பிறந்தநாள் தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு வள்ளலாரின் உயரிய கருத்துகள் உலகெலாம் சென்றடைய அனைத்துலக வள்ளலார் மாநாடு, அம்மாநாட்டில் 8 புதிய அறிவிப்புகள், வள்ளலார் முப்பெரும் விழா, வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லம் புனரமைப்பு, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் பெயரைச் சூட்டியது என வள்ளலாரைப் போற்றிச் சிறப்பித்தது நமது திராவிட மாடல் அரசு.

வள்ளலார் ஏற்றிய அணையா விளக்கைப் போல அவர் வலியுறுத்திய சமூகநீதி, சமத்துவ மற்றும் மூடநம்பிக்கை எதிர்ப்புக் கருத்துகளும் சுடர்விட்டு மக்கள் மனங்களில் எரிய வேண்டும். மதமென்னும் பேய் நம்மைப் பிடியாதிருக்க வேண்டும்"

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# சென்னை- எழும்பூரில் செவிலியர்கள் போராட்டம்

**சென்னை, அக்.06:** சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே, தமிழ்நாடு இடைநிலை சுகாதார பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக 1,000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல தங்களுக்கும் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் என்ற பதவிப் பெயருக்குப் பதிலாக, சமூக சுகாதார அதிகாரி (Community Health Officer) என்ற பெயரை அதிகாரப்பூர்வமாக வழங்க வேண்டும் என்றும், இப்பெயரையே பணி நியமன ஆணையும் குறிப்பிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல, தமிழகத்திலும் ஊதியம் மற்றும் ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சிகரம் மீடியாவின் தினத்தென்றல் நாளிதழுக்கு நிருபர்கள் தேவை!
– 9840083174, 7708107284

### திருவாரூர் அருகே விவசாய பணியின்போது

# மின்சாரம் தாக்கி தந்தை, மகன் உயிரிழப்பு!



**திருவாரூர், அக்.06** திருவாரூர் அருகே விவசாய பணியின்போது தந்தை, மகன் ஆகியோர் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்துள்ளனர். திருவாரூர் மாவட்டம், புதூர் கிராமத்தை சேர்ந்த விவசாய கூலி தொழிலாளி ராஜா. இவருக்கு சொந்தமாக டிராக்டர் உள்ள நிலையில், இவருடைய மகன் ஆதித்யா டிராக்டரை ஓட்டி வந்துள்ளார். இந்நிலையில், புதூர் கிராமத்தில் உள்ள மற்றொருவரின் விவசாய நிலத்தில், ராஜாவின் டிராக்டர் மூலமாக உளவுப் பணி நடைபெற்று கொண்டிருந்தது. அப்போது, அந்த வயலின் நடுவே சென்ற உயர் அழுத்த மின்கம்பி எதிர்பாராதவிதமாக டிராக்டர் மீது அறுந்து விழுந்துள்ளது. இதில் மின்சாரம் தாக்கி ஆதித்யா வயலில் தூக்கி வீசப்பட்டார்.

மகனின் அலறல் சத்தம் கேட்டு அருகில் விதை தெளிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தந்தை ராஜா, அவரை காப்பாற்ற ஓடி சென்று தூக்க முயன்றார். அப்போது அவரும் மின்சாரம் தாக்கி, இருவரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக துடிதுடித்து உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த திருவாரூர் தாலுகா காவல்துறையினர் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேலும், உயிரிழந்த தந்தை, மகன் இருவரின் உடல்களையும் மீட்டுப் பிரேத பரிசோதனைக்காக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

விவசாயப் பணியின் போது தாழ்வாக சென்ற உயர் அழுத்த மின்கம்பி அறுந்து விழுந்து தந்தை, மகன் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், திருவாரூர் மாவட்டத்தில் விவசாய நிலங்களின் மேல் தாழ்வாக செல்லும் மின்கம்பிகளை உடனடியாக சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# "துவரம் பருப்பு கொள்முதல் விலையில் உண்மையை மறைப்பதா?": உதயநிதி கேள்வி



**சென்னை, அக்.06:** "2024 நவம்பரில் ரூ.112.69 ஆக இருந்த துவரம் பருப்பின் கொள்முதல் விலையை, படிப்படியாக கடந்த பிப்ரவரி மாதம் ரூ.77.99 ஆகக் குறைத்தது திமுக அரசு. இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, இந்த ஆட்சியில் தான் குறைந்த விலைக்கு துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டது என்று திமுக மீது அவதூறு பரப்புவதை ஏற்க முடியாது." என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து எக்ஸ் பதிவில், 'திமுக ஆட்சியில் கிலோ ரூ.109 க்கு கொள்முதல் செய்யப்பட்ட துவரம் பருப்பை இந்த அரசு, ரூ.77.89க்கு வாங்கியுள்ளதாகவும், இதனால் இந்த ஆட்சியில் கொள்முதல் விலை ரூ.31 வரை குறைந்து, அரசுக்கு 750 கோடி மிச்சமாகும் என்றும், அரைகுறையாகவும் உண்மைகளை மறைத்தும் வெளியிடப்பட்டுள்ள ஒரு செய்தியை ஆளுங்கட்சியின் டூல்கிட்ஸ் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய விலைக்குறைப்புக்குக் காரணம், தவெக அரசு அல்ல, முந்தைய திமுக அரசு தான் என்பதே நிதர்சனமான உண்மை. 2024 நவம்பரில் ரூ.112.69 ஆக இருந்த துவரம்பருப்பின் கொள்முதல் விலையை, படிப்படியாக கடந்த பிப்ரவரி மாதம் ரூ.77.99 ஆகக் குறைத்தது திமுக அரசு.

இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, இந்த ஆட்சியில் தான் குறைந்த விலைக்கு துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டது என்று திமுகவின் மீது அவதூறு பரப்புவதை ஏற்க முடியாது.

அதுமட்டுமல்ல, ரேஷன் கடைகளில் வழங்கப்படும் பாமாயில், திமுக ஆட்சியில் சென்றாண்டு செப்டம்பரில் லிட்டர் ரூ.124.90 க்கும், டிசம்பரில் ரூ.121.95க்கும், கடந்த மார்ச் மாதத்தில் ரூ.136.95 க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

ஆனால், இந்த ஆட்சியில் கடந்த ஜூன் மாதத்தில் ரூ.154.99 க்கும், தற்போது ரூ.148க்கும் அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்துள்ளனர். திமுக ஆட்சியில் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்ட பாமாயிலை, கடந்த 3 மாதங்களில், லிட்டருக்கு ரூ.11 அதிகம் கொடுத்து இந்த ஆட்சியில் வாங்குகிறார்கள் என்றால், சுமார் ரூ.600 கோடிக்கு மேல் ஊழல் நடந்து இருக்கிறது என்று தானே அர்த்தம்.

அநாகரீகமாக நடந்துகொள்பவர்கள் (Abusive Warriors) தான் உண்மையிடம் இருந்து தூரத்தில் நிற்கிறார்கள் என்றால், இந்த ஆட்சியில் சில ஊடகங்களும் ரசிகர் மாதிரி சோஃபா மாடலில் சிக்கி நிற்பது ஏன்? அவதூறு பரப்புவதை நிறுத்திவிட்டு, விலைவாசி உயர்வால் அன்றாடம் அல்லல்படும் மக்களின் துயர் துடைக்க இந்த ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்," எனத் தெரிவித்துள்ளார்.

### வெற்றிப் பயணம் திட்டத்தை எதிர்த்த வழக்கு வாபஸ்;

# மனு திரும்ப பெறப்பட்டத்தை அடுத்து தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்

**சென்னை, அக்.06:** வெற்றிப் பயணம் திட்டத்தை எதிர்த்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது. தனியார் பேருந்து உரிமையாளர் மனுவை திரும்ப பெறப்பட்டதை அடுத்து தள்ளுபடி செய்தது சென்னை உயர்நீதிமன்றம்

முந்தைய திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட 'விடியல் பயணம்' திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில் கடந்த 2ம் தேதி முதல்வர் தொடங்கி வைத்தார். இதன் மூலம் தமிழகம் முழுவதும் 12,600க்கும் மேற்பட்ட அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்த திட்டத்தை எதிர்த்து ஈரோட்டைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர் கலாமணி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில், அரசு பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம் வழங்கப்படுவதால், தனியார் பேருந்துகளின் பெண் பயணிகள் எண்ணிக்கை குறைந்து, தங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதனால் தனியார் பேருந்து தொழிலை கைவிட வேண்டிய சூழல் உருவாகும்.

பெண்களிடம் பேருந்து கட்டணம் வசூலிக்காமல் இருப்பது அரசியல் சட்டம் வழங்கியுள்ள சம உரிமைக்கு எதிரானது. 'வெற்றிப் பயணம்' திட்டத்தின் பயனாளிகளுக்கான கட்டணச் செலவாக ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் கோடியை அரசு ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், இதே போன்று இழப்பீடு வழங்கி தனியார் பேருந்துகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த கோரிக்கை ஏற்கப்படவில்லை. சட்டப் பேரவையில் முதல்வர் அறிவித்த தன் அடிப்படையில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது,

இதுதொடர்பாக உரிய அரசாணை பிறப்பிக்கப்படவில்லை. எனவே, 'வெற்றிப் பயணம்' திட்டத்தை அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என அறிவிக்க வேண்டும், வழக்கு முடியும்வரை திட்டத்துக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் எனவும் மனுவில் கூறியுள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

விசாரணையில் வெற்றிப் பயணம் திட்டத்தை எதிர்த்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

தனியார் பேருந்து உரிமையாளர் மனுவை திரும்ப பெறப்பட்டத்தை அடுத்து மனுவைத் தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு அளித்துள்ளது.

தமிழகம் முழுவதும் செயல்படுத்தும் திட்டத்தை எதிர்த்த வழக்கை பொதுநல வழக்காக கருத முடியாது என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சிகரத்தின்
தினத்தென்றல்
தமிழகம் 06.10.2026


# “காவல்துறையில் காலிப் பணியிடங்கள் இருந்தும், ஆட்சேர்ப்பில் தாமதம் ஏன்?”– வேல்முருகன் கேள்வி

**சென்னை, அக்.06:** ‘காவல்துறையில் 15 ஆயிரம் காலிப் பணியிடங்கள் இருந்தும், ஆட்சேர்ப்பு தாமதம் ஏன்? காவல்துறைப் பணியிடங்களை முழுமையாக நிரப்பாமல் இழுத்தடிப்பதற்குப் பொறுப்பு யார்? காவலர்களுக்கு பணிச்சுமை அதிகரிப்பது தெரிந்தும் அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?’ என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாட்டில் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அரணாகத் திகழ வேண்டிய காவல்துறையில், சுமார் 15,000 பணியிடங்கள் காலியாகக் கிடக்கின்றன.

காவல்துறையில் அனுமதிக்கப்பட்ட 1,34,667 பணியிடங்களில், 1,18,851 பேர் மட்டுமே தற்போது பணியில் உள்ளனர். மறுபுறம், தேர்வுகளை முடித்துவிட்டுப் பணி நியமன ஆணைக்காக ஆயிரக்கணக்கான தகுதியான இளைஞர்கள் வீடுகளில் காத்திருக்கின்றனர்.

ரோந்து, பாதுகாப்பு, குற்றப் புலனாய்வு, நீதிமன்றப் பணிகள் என ஒரு காவலரே இரண்டு பேரின் பணிகளைச் சுமக்க வேண்டிய அவலநிலை நீடிக்கிறது. ஓய்வுபெறும் காவலர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே திட்டமிட்டு, காலியிடங்கள் உருவாவதற்கு முன்பே ஆட்சேர்ப்புப் பணிகளைத் தொடங்குவது தானே தொலைநோக்குள்ள நிர்வாகத்திற்கு அழகு? தற்போதைய ஆட்சி நிர்வாகத்தின் அணுகுமுறை திட்டமிடல் தோல்வியையே காட்டுகிறது.

காவல்துறைப் பணியிடங்களை முழுமையாக நிரப்பாமல் இழுத்தடிப்பதற்குப் பொறுப்பு யார்? தேர்ச்சி பெற்ற இளைஞர்களின் பணி நியமனத்தை முடக்கியுள்ள சட்டச் சிக்கல்களுக்கு அரசு கண்ட தீர்வு என்ன? ஓய்வுபெறும் எண்ணிக்கையைக் கணக்கில்கொண்டு உடனுக்குடன் ஆட்சேர்ப்பு நடத்தத் தொடர் திட்டம் இல்லையா?

தகுதிபெற்ற இளைஞர்களுக்குத் தாமதமின்றிப் பணி நியமன ஆணை வழங்க வேண்டும். இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குவதும், காவலர்களைப் பணிச்சுமையில் வாடவிடுவதும் மக்கள் பாதுகாப்பைப் பலவீனப்படுத்தும்.

எனவே, தமிழ்நாடு அரசு வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்து, காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வழிவகை செய்து, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

## அரசு வளைகாப்பு விழா மேடையில் வெடித்த கலகம்;

# அமைச்சர், தவெக எம்.எல்.ஏ. கோஷ்டி பூசல்!

## இடையில் மாட்டி தவித்த காங்கிரஸ் எம்.பி

**திருச்சி, அக்.06:** திருச்சியில் நடைபெற்ற அரசு வளைகாப்பு விழாவில் குத்துவிளக்கு ஏற்றுவதில் அமைச்சர் ரமேஷுக்கும், த.வெ.க எம்.எல்.ஏ நாவல்பட்டு விஜிக்கும் ஏற்பட்ட கோஷ்டி பூசல் பிரச்னையில் காங்கிரஸ் எம்.பியின் கையில் இருந்த மெழுகுவர்த்தியை தட்டிவிட்ட விவகாரம், பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.



திருச்சி ஜங்ஷன் பகுதியில் உள்ள கலையரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள் சார்பாக கர்ப்பிணி பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

இந்த விழாவிற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் தலைமை தாங்கினார். இதில், திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் தயாள், மாநிலங்களவை உறுப்பினர் கிறிஸ்டோபர் திலக் மற்றும் திருவெறும்பூர் தொகுதி த.வெ.க எம்.எல்.ஏ நவல்பட்டு விஜி உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். விழாவின் துவக்கமாக குத்துவிளக்கு ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது.

அப்போது, மேடையில் இருந்த எம்.பி கிறிஸ்டோபர் திலக் மெழுகுவர்த்தியை வாங்கி விளக்கை ஏற்ற முயன்றார்.

அந்தச் சமயத்தில், அங்கிருந்த தவெக எம்.எல்.ஏ நவல்பட்டு விஜி, 'புரோட்டாகால்படி எனக்குத்தான் முதலில் விளக்கேற்ற வாய்ப்பு தரப்பட வேண்டும்' என்று கேட்டார். அதற்கு எம்.பி கிறிஸ்டோபர் திலக், 'நான் ஒரு திரியை ஏற்றி விட்டு உங்களுக்குத் தருகிறேன்' எனக் கூற, அதற்கு நவல்பட்டு விஜி எதிர்ப்பு தெரிவித்தார்.

அப்போது, எம்.பி கிறிஸ்டோபர் திலக் மெழுகுவர்த்தியை நவல்பட்டு விஜியிடம் நீட்டினார். அதன்பிறகு, எம்.எல்.ஏ விஜி, அனைவரது முன்னிலையிலும் எம்.பியின் கையில் இருந்த மெழுகுவர்த்தியை திடீரென தட்டிவிட்டார். அரசு விழாவில், அதுவும் அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் முன்னிலையிலேயே மக்கள் பிரதிநிதிகள் இருவர் மோதிக்கொண்ட சம்பவம் அங்கிருந்த அதிகாரிகளையும் பொதுமக்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.




ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஸ்குவாஷ் மற்றும் தடகள போட்டிகளில் பதக்கங்கள் வென்று தாயகம் திரும்பிய தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா, வேலவன் செந்தில்குமார், ஷமீனா ரியாஸ், ராஜேஷ் ரமேஷ் ஆகியோரை நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி பாராட்டுகளை தெரிவித்த விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா.

# உக்ரைன் போர்: இந்தியாவைப் பாராட்டும் புதின்; இந்தியாவின் திட்டத்திற்கு உக்ரைன் வரவேற்பு

**உக்ரைன், அக்.06:** ரஷ்யா–உக்ரைன் போர் நிறுத்தத்திற்கான இந்தியாவின் வரைவுத் திட்டம் விரிவானது என உக்ரைன் கூறியுள்ளது. புதினும் மோடியின் அமைதி முயற்சியைப் பாராட்டியுள்ளார்.



உலக நாடுகளுக்கு இடையே ‘நடுநிலை’ என்பதற்கு எப்போதுமே இந்தியாவிற்குத் தனிப் பெயருண்டு... சிறப்புண்டு. இது ரஷ்யா உக்ரைன் போர் நிறுத்த முயற்சியில் மீண்டும் ஒருமுறை நிரூபணமாகி உள்ளது. இந்தியாவின் நிலைப்பாடே ‘போர் வேண்டாம்’ என்பதுதான்.

ரஷ்யா, உக்ரைன் போர் தொடங்கியபோதும் சரி... ஈரான் போர் தொடங்கியபோதும் சரி... இந்தியா அறிவுறுத்தியதே ‘அமைதியை’தான். இந்தியப் பிரதமர் மோடியின் போர் நிறுத்த முயற்சியைக் குறித்து ரஷ்ய அதிபர் புதின் சமீபத்தில், “உக்ரைன் போருக்கு முற்றுப் புள்ளி வைக்கத் தொடர்ந்து பேசி வரும் உலகத் தலைவர்களில் இந்தியப் பிரதமர் மோடியும் ஒருவர்.

இரு தரப்பிற்கும் ஏற்ற தீர்வுகளைச் சொல்வதில் மிகச் சிறந்த யோசனைகளும் மிகுந்த ஆர்வமும் கொண்டுள்ளார் அவர். அந்த வகையில், பிரதமர் மோடி நடுநிலையான ஒரு நிலைப்பாட்டையே எடுத்துள்ளார். அதேவேளையில், இந்த மோதல் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்பதில் அவர் அதிக அக்கறை காட்டி வருகிறார்.

இதை வெளிப்படையாகக் கூறுவது எனது கடமை என நினைக்கிறேன். பிரதமரின் நல்லெண்ண யோசனைகளுக்கு நாம் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

அமைதியான வழியிலும் கூடிய விரைவில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற அவரது ஆர்வத்திற்கு நமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று பேசியிருந்தார்.

இது இந்தியாவின் ராஜதந்திரத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றே எடுத்துக்கொள்ளலாம். இன்னொரு பக்கம், மோடியும், புதினும் நண்பர்கள். அதனால், புதின் இப்படிப் பேசியிருக்கலாம் என்றுக்கூட ஒரு பேச்சு எழலாம்.

இந்த இடத்தில் தற்போது உக்ரைன் எடுத்துள்ள முக்கியமான நிலைப்பாடு ஒன்றைக் கவனிக்க வேண்டும். ‘ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கி உக்ரைன் போருக்கு இந்தியா உதவி செய்கிறது’, ‘இந்தியர்களை ரஷ்யா சட்டத்திற்கு விரோதமாகப் போரில் பயன்படுத்துகிறது.

இதைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு முன்னெடுக்க வேண்டும்’ என்று இந்தியாவைத் தொடர்ந்து சாடி வந்தது உக்ரைன்.

ஆனால், இப்போது ரஷ்யா உக்ரைன் போர் நிறுத்தத்திற்கு இந்தியா அளித்துள்ள திட்டத்தை ‘இரண்டு தரப்பிற்குமானது’ என்று டிக் செய்திருக்கிறது உக்ரைன்.

ரஷ்யா உக்ரைன் போர் நிறுத்தத்தைப் பல தரப்புகள் முயன்று வருகின்றன. இந்தப் போர் நிறுத்தத்திற்கான வரைவுத் திட்டத்தை இந்தியா, துருக்கி, எகிப்து மற்றும் அமெரிக்கா வழங்கியிருந்தன. இதில் இந்தியா தந்த வரைவுதான் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. அதில் போர் நிறுத்தம் மட்டும் இருக்கவில்லை.

ஆற்றல் மற்றும் துறைமுக உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள், கருங்கடல் பகுதியின் பாதுகாப்பு குறித்தும் இருக்கிறது என்று உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹா கூறியிருக்கிறார்.

இந்தப் போரில் ரஷ்யா, உக்ரைனின் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதும்... உக்ரைன், ரஷ்யாவின் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதும் தொடர்ந்து நடந்து வருகிறது.

இதற்கான முற்றுப்புள்ளித் திட்டமும் இந்தியாவின் வரைவுத் திட்டத்தில் இடம்பெற்றிருக்கிறது போலும்.

இதைத் தாண்டி, இந்தியாவின் வரைவுத் திட்டத்தில் என்னென்ன இடம்பெற்றிருக்கின்றன என்பன இன்னும் வெளிப்படையாக... விளக்கமாகத் தெரியவில்லை.

வெளிப்படையாக... விளக்கமாக எதுவும் தெரியவில்லை என்றாலும், போரில் இருக்கும் இரண்டு நாடுகளின் 'குட்புக்'கிலுமே இந்தியா தற்போது இடம்பெற்றிருப்பது பாராட்டுக்குரியது!

## ஜந்தர் மந்தரில் 3 பெண் பத்திரிகையாளருக்கு பாலியல் துன்புறுத்தல்:

# காவல் துறை மீதான புகாரை குற்றப் பிரிவு விசாரிக்க உத்தரவு

**புதுடெல்லி, அக்.06:** தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெற்ற போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்றபோது, தங்களுக்கு டெல்லி காவல் துறையினர் பாலியல் துன்புறுத்தல் கொடுத்ததாக 3 பெண் பத்திரிகையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நாடாளுமன்ற சாலை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்தப் புகாரைப் பதிவு செய்ய டெல்லி காவல் துறை தயக்கம் காட்டிய நிலையில், நாடு முழுவதும் எழுந்த எதிர்ப்பலைகளை அடுத்து, புகாரை குற்றப்பிரிவு காவல் துறையிடம் நியாயமாக விசாரிக்க ஒப்படைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர் ஒருவர் கூறும்போது, “ஜந்தர் மந்தர் போராட்டத்தை படம்பிடித்துக் கொண்டிருந்தேன். போராட்டக்காரர்களைக் கைது செய்யும்போது அங்கு பெண் காவலர்கள் யாரும் இல்லை. இதுகுறித்து டெல்லி காவல் துறை உதவி ஆணையர் விவேக் பகத்திடம் கேள்வி எழுப்பியபோது, அவர் என்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தி பின்னோக்கித் தள்ளினார்” எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு இந்திய பத்திரிகை கவுன்சில், பிரஸ் கிளப் ஆஃப் இந்தியா ஆகியவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

டெல்லி காவல் துறை துணை ஆணையர் நேஹா யாதவ் கூறும்போது, “மூன்று பெண்கள் அளித்த புகார்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டுள்ளன. மேலும் விசாரணைக்காக இவ்வழக்கு டெல்லி காவல் துறையின் குற்றப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது” என்றார்.

இந்தப் பிரச்சினையில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் அபிஜித் திப்கே, அகில இந்திய மாணவர் சங்கத்தின் நேஹா போரா, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் டெல்லி காவல் துறையைக் கடுமையாகச் சாடியுள்ளனர்.

## திருச்சி அருகே

### ரூ.25 லட்சம் மதிப்பிலான கஞ்சா கடத்தல்: 5 பேர் கைது

**திருச்சி, அக்.06:** ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இருந்து திருச்சி வழியாக புதுச்சேரிக்கு கஞ்சா கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த தகவலின் பேரில், திருச்சி மாவட்ட எஸ்பி உத்தரவின்படி, சமயபுரம் போலீசார் திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சமயபுரம் சுங்கச்சாவடி அருகே வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட புதுச்சேரியைச் சேர்ந்த அரவிந்த் (31), ஜோயல் (24), திருச்சியைச் சேர்ந்த காமராஜ் (29), ஒண்டி முத்துகுமார் (46) மற்றும் கடலூரைச் சேர்ந்த இதயபாலன் (33) ஆகிய 5 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 22 கிலோ கஞ்சா, பறிமுதல் செய்யப்பட்டன.

# ஜிபே மூலம் தவெக பணம் விநியோகமா?

## மார்க்சிஸ்ட் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் ரமேஷ் மறுப்பு

**திருச்சி, அக்.06:** இடைத் தேர்தலில் தவெக சார்பில் வாக்காளர்களுக்கு பணம் அனுப்பியதற்கு ஆதாரம் இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என கம்யூ. கட்சி குற்றச்சாட்டுக்கு அமைச்சர் ரமேஷ் விளக்கம் அளித்துள்ளார்.



இது குறித்து திருச்சியில் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்: “தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் 2,052 குழந்தைகளுக்கு மோதிரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிக மோதிரங்கள் வழங்கியதில் தமிழகத்திலேயே திருச்சி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

தாராபுரம் தொகுதியில் களத்தில் இறங்கி வேலை பார்த்துள்ளோம். ஒவ்வொரு வீட்டுக்கும் சென்றோம். அனைத்து மக்களும் தவெகவுக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்க தயாராகிவிட்டனர். மக்களிடம் எதிர்ப்பு மனநிலை இல்லை.

திமுக, அதிமுகவினரே கட்சிக்காரர்களை வைத்து தவெக வேட்பாளர் செல்லும் இடங்களில் எதிர்ப்பு கோஷம் போட வைக்கின்றனர். மக்களிடம் எதிர்ப்பு மனநிலை இருப்பது போல கட்டுக்கதையை கட்டமைக்கின்றனர்.

‘இடைத்தேர்தலில் வாக்காளர்களுக்கு ஜிபே மூலம் தவெகவினர் பணம் அனுப்புவதாக மா.கம்யூ. மாநிலச் செயலாளர் சண்முகம் குற்றம்சாட்டியுள்ளாரே?’ என செய்தியாளர்கள் கேட்டதற்கு, “கடந்த சட்டப்பேரவைத் தேர்தலிலேயே நாங்கள் யாருக்கும் பணம், பரிசுப் பொருள் என எதுவும் கொடுக்காமல் வெற்றி பெற்றோம். இந்த இடைத் தேர்தலில் பணம் வழங்கியதற்கான ஆதாரமிருந்தால் புகார் அளித்து நடவடிக்கை எடுக்க சொல்லுங்கள், என்றார்.

# ரிஷப் ஷெட்டியுடன் இணையும் மஞ்சும்மல் பாய்ஸ் சிதம்பரம்

சவுபின் சாஹிர், நாத் பாஸி உள்பட பலர் நடித்து வெளியான மலையாள படம், ‘மஞ்சும்மள் பாய்ஸ்’. கொடைக்கானல் குணா குகையில் நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து சிதம்பரம் இயக்கிய இந்தப் படம், மலையாளம் தவிர, தமிழ், தெலுங்கிலும் சூப்பர் ஹிட்டானது.



இந்நிலையில் இதன் இயக்குநர் சிதம்பரமும் பிரபல பான் இந்தியா நட்சத்திரம் ரிஷப் ஷெட்டியும் 2 புதிய படங்களில் இணைகின்றனர். முதல் படம் விளையாட்டுப் பின்னணியில் உருவாக இருக்கிறது. கன்னடத்தில் உருவாகும் இப்படம் மற்ற தென்னிந்திய மொழிகளில் டப் செய்யப்பட்டு வெளியாக இருக்கிறது. இப்படத்தின் முன் தயாரிப்பு பணிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன. படப்பிடிப்பு அடுத்த ஆண்டு தொடங்க இருக்கிறது. இதை ஷிபு தமீன்ஸ் தயாரிக்கிறார்.

இப்படம் பற்றிய மற்ற தகவல்கள் பின்னர் வெளியிடப்படும். நடிகர் ரிஷப் ஷெட்டி தற்போது ‘ஜெய் ஹனுமான்’ படத்தில் நடித்து வருகிறார். அதை முடித்துவிட்டு இதன் படப்பிடிப்பில் கலந்து கொள்வார் என்று தெரிகிறது.

# கோவை, தருமபுரி, தேனி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, அக்.06:** தமிழகத்தில் இன்று (அக்.6) கோவை, நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.




இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், குமரிக்கடல் பகுதிகளிலிருந்து வடக்கு உள் கர்நாடகாவின் மேல் நிலவும் வளி மண்டல சுழற்சி வரை, தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகா வழியாக சுமார் 0.9 கி.மீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (அக்.6) கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இன்று (அக்.6) திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். இதர மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.




சிகரத்தின்

# தினத் தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174




### ஞானேஷ் குமாரை இடைநீக்கம் செய்ய உச்ச நீதிமன்றம் மறுப்பு:

## தேர்தல் ஆணையத்துக்கு நோட்டீஸ்

**புது டெல்லி, அக்.06:** தலைமைத் தேர்தல் ஆணையத்தில் உள்ள மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் ஒப்புதல் அல்லது ஒருமித்த கருத்து இல்லாமல், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், அவரை இடைநீக்கம் செய்வதற்கான இடைக்கால உத்தரவை பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.



மற்ற இரு தேர்தல் ஆணையர்களின் ஒப்புதல் இன்றி பல வழிகாட்டுதல்களும், மென்பொருள் மாற்றங்களும் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் குற்றம்சாட்டி, தலைமைத் தேர்தல் ஆணையரின் தலைமையிலான தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டை எதிர்த்து தொடரப்பட்ட பல மனுக்களை உச்ச நீதிமன்றம் விசாரித்து வருகிறது.

தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, மனுவில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு நோட்டீஸ் அனுப்பியது. ஆணையத்தின் பதிலைப் பரிசீலித்த பிறகு, தேவையான ஒருமித்த கருத்து இல்லாமல் தலைமைத் தேர்தல் ஆணையர் எடுத்த முடிவுகளை மறுபரிசீலனை செய்யவோ அல்லது ரத்துசெய்யவோ வாய்ப்புள்ளதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனது அதிகாரங்களைப் பயன்படுத்திய விதம் மற்றும் சர்ச்சைக்குரிய 'படிவம் 6' மாற்றம் உள்ளிட்டவை குறித்துத் தொடரப்பட்ட வழக்குகளில், சம்பந்தப்பட்ட முடிவுகள் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் திங்களன்று உத்தரவிட்டது.

"ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்போது, படிவம் 6ஐ மாற்றியது யார் என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். ஒருமித்த கருத்து இல்லையெனில், முடிவு பெரும்பான்மை அடிப்படையில் இருக்க வேண்டும்; இல்லையெனில், அந்த முடிவு ரத்து செய்யப்படலாம். நீங்கள் உங்கள் வாதங்களை ஒரு செய்தித்தாள் அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே முன்வைக்கிறீர்கள்" என்று தலைமை நீதிபதி கூறினார்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான விகாஸ்சிங் இதற்குப் பதிலளிக்கையில், "தேர்தல் ஆணையத்திடமிருந்தே ஒரு பத்திரிகை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் இந்த அறிக்கையை மறுக்கவில்லை" என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த தலைமை நீதிபதி, "அந்த அறிக்கை துல்லியமானதாகவோ அல்லது தவறானதாகவோ இருக்கலாம். எனவே அதன் அடிப்படையில் நாங்கள் உத்தரவு பிறப்பிக்க முடியாது. தேர்தல் ஆணையத்தின் பதிலுக்காக நாங்கள் காத்திருக்க வேண்டும்," என்று கூறினார்.

### 'ஆப்டோஜெனெடிக்ஸ்' கண்டுபிடிப்புக்காக

## விஞ்ஞானிகள் மூவருக்கு மருத்துவ நோபல் பரிசு!

**சென்னை, அக்.06:** ஆப்டோஜெனெடிக்ஸ் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக, கார்ல் டீசெரோத், பீட்டர் ஹெகமன் மற்றும் ஜார்ஜ் நாகல் ஆகிய 3 விஞ்ஞானிகளுக்கு 2026ம் ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.



நரம்பு செல்களைக் கட்டுப்படுத்த ஒளியைப் பயன்படுத்தும் 'ஆப்டோஜெனெடிக்ஸ்' முறை தொடர்பான ஆய்வுக்காக கார்ல் டீசெரோத், பீட்டர் ஹெகமன் மற்றும் ஜார்ஜ் நாகல் ஆகியோருக்கு 2026ம் ஆண்டின் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மூளைச் சுற்றுகள் எவ்வாறு நினைவுகள், உணர்வுகள் மற்றும் நடத்தைகளை வடிவமைக்கின்றன என்பதை ஆராய இம்முறை உதவியது.

ஆப்டோஜெனெடிக்ஸ் என்றால் என்ன?

கிளமிடோமோனாஸ் (Chlamydomonas) எனப்படும் ஒற்றை செல் பாசி குறித்து ஹெகமன் மற்றும் நாகல் ஆகியோர் ஆய்வு செய்தனர். அவர்கள் அந்தப் பாசியின் மேற்பரப்பில் 'சேனல்ரோடாப்சின்' (channelrhodopsin) எனப்படும் புரதத்தைக் கண்டறிந்தனர். நீல நிற ஒளி படும்போது, இந்தப் புரதம் ஒரு பாதையைத் திறக்கிறது; அதன் வழியாக மின்னூட்டம் பெற்ற துகள்கள் பாய்ந்து, மின் சமிக்ஞையை உருவாக்குகின்றன.

பின்னர், டீசெரோத் 'சேனல் ரோடாப்சின்' புரதத்துக்கான மரபணுவை எலிகளின் நரம்பு செல்களுக்குள் செலுத்தினர். அவற்றின் மீது நீல நிற ஒளியைச் செலுத்துவதன் மூலம், நரம்பு சமிக்ஞையைத் தூண்ட முடிந்தது. இத்தொழில்நுட்பம் 'ஆப்டோஜெனெடிக்ஸ்' என்று அழைக்கப்படலானது.

இந்த முறையானது ஒளியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நரம்பு செல்களைச் செயல்படுத்தவும், குறிப்பிட்ட நினைவுகள், உணர்வுகள் மற்றும் நடத்தைகளில் அவற்றின் பங்கை ஆராயவும் வழிவகுக்கிறது. பார்வைக் குறைபாடு உள்ளவர்களின் பார்வையை மீட்டெடுக்கும் முயற்சிகளிலும் இதன் பயன்பாட்டை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஆல்பிரட் நோபலின் உயிலின் படி, மனிதகுலத்துக்கு முக்கியப் பங்களிப்பை வழங்கும் கண்டுபிடிப்புகளுக்காக 1901ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

2026ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுத் தொகை 11.5 கோடி ரூபாயாகும். இந்தத் தொகை மூன்று வெற்றியாளர்களுக்கும் சமமாகப் பிரித்து வழங்கப்படுகிறது.

மருத்துவ நோபல் பரிசு, கரோலின்ஸ்கா நிறுவனத்தில் உள்ள 50 பேராசிரியர்களைக் கொண்ட நோபல் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

ஸ்டாக்ஹோம் நகருக்கு அருகிலுள்ள சோல்னாவில் உள்ள கரோலின்ஸ்கா நிறுவனத்தின் நோபல் அரங்கில் இந்த விருது அறிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட முதல் நோபல் பரிசு மருத்துவத் துறைக்கானதாகும். இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி மற்றும் பொருளாதார அறிவியல் ஆகிய துறைகளுக்கான பிற பரிசுகள் வரும் நாட்களில் அறிவிக்கப்பட வுள்ளன.

### விஜய் சேதுபதியை புகழ்ந்த

## மாளவிகா மோகனன்



தியாகராஜன் குமாரராஜா எழுதி இயக்கும் படம், 'பாக்கெட் நாவல்'. விஜய் சேதுபதி, மாளவிகா மோகனன், ராஜ் பி.ஷெட்டி நடிக்கின்றனர். இளையராஜா இசை அமைக்கிறார். இதில் நடித்தது குறித்து மாளவிகா மோகனன் கூறுகையில், 'சில படங்கள் உருவாகும்போது, அவை தனக்கான ஒரு குட்டி உலகமாகவே மாறிவிடுகின்றன. அப்படிப்பட்ட ஓர் அற்புதமான படத்தின் அங்கமாக இருந்ததை நினைத்து நான் மிகவும் அதிர்ஷ்டசாலியாக உணர்கிறேன். மாதக்கணக்கில் ஒரு குழுவுடன் தினமும் பல மணி நேரங்களை பகிர்ந்துகொள்கிறோம். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்கிறோம். ஒன்றாக அமர்ந்து சாப்பிடுகிறோம். மணிக்கணக்கில் பேசுகிறோம். நல்ல நாட்களையும், கடினமான நாட்களையும் கடக்கிறோம்.

உணர்ச்சிப்பூர்வமான ஏற்ற, இறக்கங்களை ஒன்றாகவே எதிர்கொள்கிறோம். நமக்கு தெரியாமலேயே அவர்கள் நம் சொந்த வீட்டுக்கு அப்பால் மற்றொரு வீடாக மாறிவிடுகிறார்கள். விஜய் சேதுபதி மிகவும் அக்கறையுள்ள, விட்டுக்கொடுக்கும் சக நடிகராக இருந்ததற்கு மனமார்ந்த நன்றி. எவ்வளவு நேரமானாலும், எவ்வளவு கடினமாக இருந்தாலும், நான் எனது நடிப்பை சரியாக கொண்டு வர எனக்கு அவ்வளவு ஊக்கமும், இனிமையான அணுகுமுறையும் அளித்து, ஒரு வசதியான கம்போர்ட்டான சூழலை உருவாக்கி தந்தார். நாங்கள் ஏற்கனவே 'பேட்ட', 'மாஸ்டர்' ஆகிய படங்களில் இணைந்து நடித்திருந்தாலும், ஒரே திரையை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அதனால், இந்த வாய்ப்பு நீண்ட நாட்களாகவே பாக்கியாக இருந்தது. அது எவ்வளவு அழகான ஒன்றாக அமைந்திருக்கிறது. தியாகராஜன் குமாரராஜா செம கூலான மனிதர். மனிதர்களையும், இந்த உலகத்தையும் அவர் பார்க்கும் விதம் மிகவும் தனித்துவமானது. அவருடன் பணியாற்றியது, அதைவிட முக்கியமாக அவரை ஒரு மனிதராகவும், நல்ல நண்பராகவும் புரிந்துகொண்டது, எனது வாழ்நாளில் கிடைத்த ஒரு மிகச்சிறந்த அனுபவமாகும். ஒரு படைப்பாளியாக உறுதியாகவும், அதேவேளையில் இரக்கத்துடனும் இருக்கும் விதம் அற்புதமானது. படப்பிடிப்பில் அவர் செய்த விஷயங்களை எல்லாம் பார்த்து நான் வியந்திருக்கிறேன். 'பாக்கெட் நாவல்' வெறும் படம் மட்டுமல்ல, அதற்கும் மேலான ஒன்று' என்றார்.

## ஞானேஷ் குமாரை அம்பலப்படுத்திய உச்ச நீதிமன்றம் : சு.வெங்கடேசன்

**சென்னை, அக்.06:** "பல லட்சம் இந்தியர்களின் வாக்களிக்கும் உரிமையைத் திருடிய குற்றம் தேசத் துரோகத்துக்கு நிகரானது. இந்தக் குற்றத்துக்காக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உடனடியாகக் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்" என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி சு.வெங்கடேசன் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'புதிய வாக்காளர்களைச் சேர்ப்பதற்கான ஆன்லைன் படிவம் 6ல் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் சட்டவிரோதம் என இரண்டு தேர்தல் ஆணையர்களும் பதிவு செய்துள்ளனர். அதையும் மீறிதான் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் படிவம் 6ஐ திருத்தியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து செப்டம்பர் 26ஆம் தேதி இந்தியத் தேர்தல் ஆணையம் அளித்த விளக்கத்தில் படிவம் 6ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை உச்ச நீதிமன்றம் தனது முந்தைய உத்தரவுகளில் ஏற்றுக் கொண்டுள்ள தாகக் கூறப்பட்டிருந்தது.

ஆனால், இன்று நடந்த வழக்கு விசாரணையில் படிவம் 6ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு நாங்கள் ஒப்புதல் அளிக்கவில்லை என உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவெ பல்வேறு தளங்களில் அம்பலப்பட்ட ஞானேஷ் குமார் இன்று உச்ச நீதிமன்றத்திலும் அம்பலப் பட்டுள்ளார்.

பல லட்சம் இந்தியர்களின் வாக்களிக்கும் உரிமையைத் திருடிய இந்தக் குற்றம் தேசத் துரோகத்துக்கு நிகரானது. இந்தக் குற்றத்துக்காக அவர் உடனடியாகக் கைது செய்யப் பட்டு விசாரிக்கப் பட வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவு வங்கிகள், சங்கங்களில் நகைக் கடனுக்கான உச்சவரம்பு உயர்வு

**சென்னை, அக்.06:** இதுகுறித்து கூட்டுறவுத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நகைக் கடன்களுக்கு ஒரு கிராமுக்கான கடன் தொகை அதிகபட்சமாக ரூ.10,000 வரை அல்லது நகைகளின் சந்தை மதிப்பில் 75 சதவீதம் என மாற்றியமைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தங்கள் சொந்தக் கிளைகள் மூலம் வழங்கும் நகைக் கடன்களுக்கான வட்டிக்கும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் நகைக் கடன்களுக்கான வட்டிக்கும் இடையே பெரும் வேறுபாடு நிலவியது.

இதை சரிசெய்யும் வகையில் நகைக்கடனுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் விதிக்கும் வட்டி விகிதம், அதன் கிளைகளில் பொதுமக்களுக்கு தரப்படும் நகைக்கடன் வட்டியைவிட குறைந்தது 1.25 சதவீதம் குறைவாக இருக்க வேண்டும்.

## "நெசவாளர்களின் பிரச்சினையை தமிழக அரசு வேடிக்கைப் பார்க்கிறது"

### மா.கம்யூ. கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் காட்டம்

**சென்னை, அக்.06:** 'விசைத்தறி தொழிலாளர்களுக்கு புதிய ரக சேலை ஒன்றுக்கு ரூ.250 கூலி வழங்க வேண்டும், வேலையில்லா காலத்துக்கு மாதம் ரூ.10 ஆயிரம் நிவாரணம் வழங்கிட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் விருதுநகரில் காத் திருப்பு போராட்டம் நடை பெறும்' என அக்கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் அறிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழக அரசின் இலவச சேலை உற்பத்தி திட்டத்தில் விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம், ஸ்ரீவில்லி புத்தூர், வத்திராயிருப்பு பகுதிகளில் 29 கூட்டுறவு சங்கங்கள் மூலம் 4000 பெடல் தறிகள் இயங்கி வருகின்றன. சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இத்தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றனர். தவெக அரசு இந்த ஆண்டு புதிய ரக சேலைகள் வழங்கப்படும் என்று அறிவித்தது.

ஏற்கெனவே உற்பத்தி செய்த ஜனதா ரக சேலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 103.80. தற்போது புதிய ரகத்திற்கு நிர்ணயம் செய்த கூலி ரூ. 114.80 ஆகும். ஆனால், புதிய ரகத்திற்கு ஒரு சேலை நெசவு செய்வதற்கு ரூ. 250/ வரை செலவாகும் எனவும், ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு 2 சேலைகள் மட்டுமே நெசவு செய்ய வாய்ப்புள்ளது எனவும் விசைத்தறி நெசவாளர்கள் கூறி வருகின்றனர்.

இதனால் பல்லாயிரக் கணக்கான விசைத் தறி தொழிலாளர்கள் வாழ்வாதாரம் இழந்து கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர்.

புதிய ரக சேலைக்கு கூலி உயர்வு வழங்கிட கோரி விசைத் தறி நெசவாளர்கள் கைத்தறி துறை அமைச்சர், அரசின் உயர் அதிகாரிகளை சந்தித்து முறையிட்டும் எவ்வித பயனும் இல்லாததால் 50 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால், நெசவாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்று வதற்கு தமிழக அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இதுவரை வேடிக்கைப் பார்த்து வருவது வன்மையான கண்டனத்துக்குரியது.

எனவே, விசைத்தறி தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளான புதிய ரக சேலை ஒன்றுக்கு ரூ. 250 கூலி வழங்க வேண்டும், புதிய ரக மாற்றத்திற்கு உபகரணங்கள் மற்றும் செலவினங்களுக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கிட வேண்டும், வேலையில்லா காலத்திற்கு மாதம் ரூ. 10 ஆயிரம் நிவாரணம் வழங்கிட வேண்டும், கொள்முதல் செய்யப்படாமல் உள்ள பழைய ரக சேலைகளை கொள்முதல் செய்திட வேண்டும், புதிய ரகத்தினால் பழைய ரகத்தில் பணி செய்த பசை போடுபவர்கள், நூல் சுற்றுபவர்கள், பாவோடிகளுக்கு மாற்று ரகம் வழங்கி பணிகள் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் விருதுநகரில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது.

விசைத்தறி நெசவாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் இந்த போராட்டத்திற்கு அனைத்து தரப்பு பொதுமக்களும், ஜனநாயக இயக்கங்களும் பேராதரவு அளிக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

மேலும், பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால் போராடும் விசைத்தறி நெசவாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிடவும், பொது மக்களுக்கு எவ்வித தங்கு தடையுமின்றி இலவச வேட்டி, சேலை உரிய காலத்தில் வழங்கிடவும் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது' எனத் தெரிவித்துள்ளார்.

Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor:S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.